1994 ஏப்ரல் 27]

(ஆ) ஆலங்குடி தொகுதி வெட்டன் விடுதி அரசு உயர்நிலைப் பள்ளிக்குக் கட்டிட வசதிப் பற்றாக்குறையால் மாணவர்கள் அவதியுறுவது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்பு. திரு. எஸ். சண்முகநாதன், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. எஸ். சண்முகநாதன்.

திரு. எஸ். சண்முகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆலங்குடி தொகுதி வெட்டன் விடுதியில் இருக்கும் அரசு உயர்நிலைப் பள்ளிக்குக் கட்டிட வசதி போதாமையால் மாணவர்கள் அவதியுறுவது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

** மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி :* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது:

அறிக்கை.

1994-95 ஆம் ஆண்டின் பகுதி-2 திட்டத்தின் கீழ் அரசு உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளுக்குக் கட்டிடம் கட்டவும், நில ஆர்ஜிதம் செய்யவும் அரசால் ரூ.75 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அரசு உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளுக்கு இரு வகுப்பறைகள் கொண்ட கட்டிடம் கட்டுவதற்கு குறைந்தபட்சம் ரூ. 2.75 இலட்சமும், அதிக பட்சமாக ரூ. 5 இலட்சமும் அனுமதிக்கப்படுகிறது. பள்ளிக் கட்டிடத்தின் மொத்த மதிப்பீட்டில் 50 சதவீதம் அரசின் பங்குத் தொகையாக வழங்கப்படுகிறது. மீதமுள்ள தொகை சமுதாய ஈடுபாட்டின் மூலமாகப் பெறப்படவேண்டும். ஆலங்குடி தொகுதி வெட்டன் விடுதியில் இருக்கும் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு அப்பள்ளியின் பெற்றோர்-ஆசிரியர் கழகத்தின் மூலம் 50% தொகை பெறப்பட்டால் அப்பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம் கட்டுவதற்கு அரசின் பங்குத் தொகையாக 50% தொகையை அளிப்பதற்கு அரசின் நிதி நிலைக்கேற்ப பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. எஸ். சண்முகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெட்டன் விடுதியில் இருக்கின்ற அந்த அரசு உயர்நிலைப் பள்ளி 1967-ஆம் ஆண்டு உயர்நிலைப் பள்ளியாகத் தரம்

[திரு. எஸ். சண்முகநாதன்] [1994 ஏப்ரல் 27

உயர்த்தப்பட்டுள்ளது. மாணவர்களுடைய எண்ணிக்கை மிக அதிகமாக, அங்கே 350--ஐத் தாண்டியுள்ளது. அங்கே அரசின் சார்பிலே ஒரே ஒரு கான்கிரீட் கட்டிடம் மட்டும்தான் இருக்கிறது. அதிலே தலைமையாசிரியருடைய அறை மற்றும் ஆசிரியர்களுடைய ஓய்வறை இருக்கின்ற காரணத்தினாலே, 10-ஆம் கிளாஸ் வரையுள்ள அந்த அரசு உயர்நிலைப் பள்ளியிலே ஒரே ஒரு கிளாஸ் ரூம்தான் கட்டிடத்தில் இருக்கின்ற சூழ்நிலை இருக்கிறது. அங்கே பெற்றோர்--ஆசிரியர் கழகத்தின் சார்பிலே அங்கே கூரைக் கொட்டகை ஒன்று போடப்பட்டு, அதுவும் பழுதடைந்து இருக்கின்ற காரணத்தினாலே, பொதுப்பணித் துறையினர் அதிலே குழந்தைகளுக்கு வகுப்புகளை நடத்தக்கூடாது என்று தடை விதித்திருக்கின்ற காரணத்தினாலே, அவசியம் கருதி, இந்த நிதியாண்டிலாவது அங்கே கட்டிடம் கட்டுவதற்கு அரசு முன்வருமா, அதற்கு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகுதி-2 திட்டத்தின் கீழ் இந்த ஆண்டில் அரசு ரூபாய் 75 இலட்சத்தை பள்ளிக் கட்டிடங்களைக் கட்டுவதற்காக ஒதுக்கி இருக்கிறது. ஆனால் இந்த ஆண்டில் ஒரு பகுதித் தொகை சமுதாய ஈடுபாட்டின் மூலமாக, பெற்றோர்–ஆசிரியர் கழகத்தின் மூலம் பெறப்பட்டு, மீதித் தொகையை அரசு செலுத்தவேண்டுமென்று விதிமுறைகள் வகுக்கப்பட்டு இருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பள்ளிக்குக் கட்டிடம் தேவை என்றால், ரூ.2–3/4 அல்லது ரூ.5 இலட்சம் என்று கட்டிடத்திற்கான மதிப்பீட்டைத் தயார் செய்து அதில் ஒரு பாதித் தொகையை பெற்றோர்–ஆசிரியர் கழகத்தின் மூலமாகச் செலுத்துவதற்கு முன் வந்தால் அரசு நிதி நிலைமையின் அடிப்படையிலும், தேவையின் அடிப்படையிலும், முன்னுரிமை அடிப்படையிலும் இதைப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். சண்முகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இந்த பெற்றோர்–ஆசிரியர் கழகத்தின் சார்பிலே, தற்போதைய அவசியத் தேவையைக் கருதி. அங்கே ஒரு கூரைக் கொட்டகையைக் கட்டிக் கொடுத்து இருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய அந்த வேண்டுகோளுக்கு ஏற்ப, அந்தப் பகுதியிலே இருக்கின்ற பெற்றோர்-ஆசிரியர் கழகத்தின் சார்பிலே, பப்ளிக் கான்ட்ரிபுயூஷனான 50 சதவீதத்தை, அந்தத் தொகையைச் செலுத்துவதற்கான உறுதியை நான் இந்தச் சமயத்திலே அளித்து கொள்கிறேன். ஆகவே நீங்கள் அந்தத் தொகையைக் கொடுத்தவுடன் உடனடியாக இந்த நிதியாண்டிலேயே அந்த பர்மனென்ட் கட்டிடம் கட்டுவதற்கு முன் வருவீர்களா என அறிய விரும்புகிறேன்.

1994 ஏப்ரல் 27]

முற்பகல் 11--40

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பகுதி தொகையைச் செலுத்திவிட்டு, பெற்றோர்–ஆசிரியர் கழகத்தின் மூலமாக ஒரு தீர்மானம் நிறைவேற்றி, பள்ளியின் வழியாக அது பள்ளிக் கல்வி இயக்குனருக்கு உடனடியாக அனுப்பப்படுமானால் இந்த ஆண்டிலேயே அதைப் பரிசீலிக்கின்ற வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

6. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. கே. முனிவெங்கடப்பன், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

திரு. கே. முனிவெங்கடப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாகக் குழுவின் நூற்று அறுபத்தி மூன்று முதல் நூற்று அறுபத்தேழு வரையிலான ஐந்து அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) சட்ட விதிகள் ஆய்வுக்குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் அறிக்கையை அளித்தல். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர். சட்ட விதிகள் ஆய்வுக்குழு.

திரு. ச. காந்திராஜன் (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 1993-94 -ஆம் ஆண்டிற்கான சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் ஒன்பதாவது அறிக்கையினைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(இ) அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கையை அளித்தல். திரு. எஸ். டேனியல்ராஜ், அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர்.

திரு. எஸ். டேனியல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 1993-94 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் பன்னிரெண்டாவது அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.